தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 10, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு—2023
1992 மார்ச் 23, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 9-30 மணியளவில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு."

தம் குடியை உயர்த்துவதற்குப் பெரு முயற்சி செய்பவர்கள் மேற்கொள்ளும் செயல்கள் விரைவில் அவையே நல்லமுறையில் முடியும் என்பது உறுதி.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. இ. சந்திரசேகர நாயகர் அவர்கள் 15—8—1991 அன்றும், திரு. டி. இருசப்பன் அவர்கள் 16—12—1991 அன்றும் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. இ. சந்திரசேகர நாயகர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. இருசப்பன் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ஆத்தூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் மௌனமாக எழுந்து நின்றனர்.)